ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப்பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2091/63 - 2018 ඔක්තෝබර් මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.10.04
*2091/63 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடமேல் மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் மற்றும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்டம் ஆகியவற்றினால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் வடமேல் மாகாண மாகாண சபையின் கூட்டுறவு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சராக எனக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக 1974, சனவரி மாதம் 10 ஆந் திகதியிடப்பட்டதும் 93/5 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விதிகளுக்கு பின்வரும் திருத்தங்களை செய்வதற்கு வடமேல் மாகாண மாகாண சபையினால் 2018, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதியன்று அங்கீகாரம் வழங்கி உறுதிப்படுத்தியுள்ளமை பற்றி இத்தால் அறிவிக்கின்றேன்.*

**பியசிறி ராமநாயக்க,**
கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, காணி,
மின்சக்தி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார,
கலாச்சாரமும் கலை நடவடிக்கைகளும் மற்றும் தகவல், தொழில்நுட்ப
அமைச்சு - வடமேல் மாகாணம்.

குருநாகல்,
*2018, ஒற்றோபர் 04.*

01. கூட்டுறவுச் சங்க விதிகளின் 2 ஆம் பிரிவின் (iii) ஆம் உப பிரிவிற்கு உடனடுத்து பின்வரும் புதிய உப பிரிவினை சேர்ப்பதன் மூலம் 2 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது.

    (iv) சங்கங்கள் சார்பிலும் பிராந்திய அல்லது பிரிவு குழுக்கள் சார்பிலும் துணை விதிகளின் மூலம் நிர்னயிக்கப்பட்ட அதிகார பிரதேசத்தை குறிக்கும் வரைபடம் இருத்தல் வேண்டும்.

02. கூட்டுறவுச் சங்க விதிகளின் 8 ஆம் பிரிவை 8 (i) ஆம் உப பிரிவாக இலக்கமிடுவதன் மூலமும் இந்த உப பிரிவிற்கு உடனடுத்து பின்வரும் புதிய பிரிவினை சேர்ப்பதன் மூலமும் 8 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது.

1A - PG 4216— 12 (2018/10)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ii) துணை விதிகளின் மூலம் விதித்துரைக்கப்படும் காலப்பகுதிக்குள் வருடாந்த பொதுக் கூட்டங்களில் கலந்துகொள்ளாமை அல்லது துணை விதிகளின் மூலம் விதித்துரைக்கப்பட்டுள்ள விதத்தில் சங்கத்துடன் பொருளாதார ரீதியில் கொடுக்கல் வாங்கல்களை செய்யாமை அல்லது துணை விதிகளின் மூலம் விதித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த பெறுமதியினை கணக்குகளில் பேணப்படாமை காரணமாக எவரேனும் உறுப்பினர் ஒருவரை செயற்பாடற்ற உறுப்பினர் ஒருவராக பெயர் குறிப்பிடுவதற்கு பொதுசபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

03. கூட்டுறவுச் சங்க விதிகளின் 9 ஆம் பிரிவை 9 (i) ஆம் உப பிரிவாக இலக்கமிடுவதன் மூலமும் இந்த உப பிரிவிற்கு உடனடுத்து பின்வரும் புதிய உப பிரிவினை சேர்ப்பதன் மூலமும் 9 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது.

(ii) இவ்வாறு உறுப்பாண்மையிலிருந்து நீக்கப்படுவதற்கு முன்னர் குறித்த உறுப்பினரிடமிருந்து விளக்கம் கோரவேண்டுமென்பதோடு, உறுப்பினருக்கு விடய முன்வைப்பினைச் செய்வதற்கு 14 நாட்கள் கொண்ட காலப்பகுதியினை வழங்குதல் வேண்டும். இது தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானமானது 90 நாட்களுக்குள் எழுத்து மூலம் உறுப்பினருக்கு அறிவித்தல் வேண்டும்.

04. கூட்டுறவுச் சங்க விதிகளின் 12 ஆம் பிரிவை நீக்கி, அதற்கு பதிலாக பின்வரும் பிரிவினை பதிலீடு செய்வதன் மூலம் 12 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது.

12 (i) பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒவ்வொன்றும் பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய உறுப்பினர்கள் இடாப்பொன்றை பின்வரும் ஒழுங்குமுறையில் வைத்திருத்தல் வேண்டும்.

(அ) உறுப்பினரின் முழுப் பெயர்
(ஆ) உறுப்பினரின் முதல் எழுத்துக்களுடனான பெயர்
(இ) உறுப்பினரின் முதல் எழுத்துக்களுடனான பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
(ஈ) பிறந்த திகதி
(உ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்
(ஊ) தொலைபேசி இலக்கம்
(எ) மின்னஞ்சல் முகவரி
(ஏ) உறுப்பினரின் நிரந்தர முகவரி
(ஐ) கிராம உத்தியோகத்தர் பிரிவின் இலக்கமும் பெயரும்
(ஒ) உறுப்பினரின் இலக்கம்
(ஓ) உறுப்பினருக்கு சொந்தமான பங்குகளின் எண்ணிக்கை
(ஔ) உறுப்புரிமை பெற்றுக் கொள்ளப்பட்ட திகதி
(க) உறுப்பினரினால் பெயர் குறிப்பிடப்பட்ட பின்னுரிமையாளரின் பெயர்
(ங) உறுப்பினரின் ஒப்பமும் பெருவிரல் அடையாளமும்
(ச) உறுப்புரிமையை இழந்த திகதி
(ஞ) உறுப்புரிமை இழக்கப்பட்டமைக்கான காரணம்

(ii) பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஆண்டும் யூன் 30 ஆந் திகதியன்று உறுப்பினர் இடாப்பினை இற்றைப்படுத்த வேண்டுமென்பதோடு, செய்யப்படும் திருத்தங்கள் கூட்டுறவுச் சங்க பதிவாளரினால் விதித்துரைக்கப்படும் விதத்தில் 3 மாதங்களுக்குள் வெளிப்படுத்துதலும் வேண்டும்.

(iii) மேற்போந்த மாதிரிக்கு அமைவாக ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட சங்கங்களும் உறுப்பினர்கள் இடாப்பினை தயாரிக்க வேண்டுமென்பதோடு, இது இந்த விதி உறுதிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து பதிவாளரினால் விதித்துரைக்கப்படும் காலப்பகுதிக்குள் செய்யப்படுதல் வேண்டும். இவ்வாறு மீளத் தயாரிக்கப்பட்ட இடாப்பானது கூட்டுறவுச் சங்க பதிவாளரினால் விதித்துரைக்கப்படும் விதத்தில் 3 மாதங்களுக்குள் வெளிப்படுத்துதல் வேண்டும்.

05. கூட்டுறவுச் சங்க விதிகளின் 16 ஆம் பிரிவை நீக்கி, அதற்கு பதிலாக பின்வரும் பிரிவினை பதிலீடு செய்வதன் மூலம் 16 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது.

16. (i) பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒவ்வொன்றும் கடனாகவோ அல்லது வைப்பாகவோ அல்லது வேறு விதத்திலோ உறுப்பினர் அல்லாதோரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்கூடிய தொகையானது சங்கத்தின் தேவையின் மீது பொதுக் கூட்டமொன்றில் காலத்திற்கு காலம் நிர்னயிக்கப்பட்டு பதிவாளரின் முன் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்தல் வேண்டும்.

(ii) அதேபோன்று சங்கத்தின் செயற்பாட்டுக்குத் தேவையென பதிவாளரினால் கருதப்படுகின்ற விடத்து உறுப்பினர் வைப்புகளை திரட்டுவது சம்பந்தமான கட்டளைகளை விதித்துரைப்பதற்கும் பதிவாளருக்கு அதிகாரமுள்ளது.

06. கூட்டுறவுச் சங்க விதிகளின் 17 ஆம் பிரிவானது பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது.

06.1 இதன்கண்ணுள்ள (i) ஆம் உப பிரிவினை நீக்கி அதற்குப் பதிலாக புதிய பிரிவொன்றை பதிலீடு செய்வதன் மூலமும்,

(i) (அ) கடனாகவோ அல்லது வைப்பாகவோ அல்லது வேறு விதத்திலோ உறுப்பினர் அல்லாதோரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்கூடிய தொகையை தீர்மானித்தல்.

06.2 இதன்கண்ணுள்ள (ii) ஆம் உப பிரிவின் முதலாம் பந்தியை (அ) எனவும் இரண்டாம் பந்தியை (ஆ) எனவும் மீள இலக்கமிடுவதன் மூலமும் மூன்றாம் பந்தியை நீக்கி அதற்குப் பதிலாக (இ) என்னும் புதிய பிரிவொன்றை பதிலீடு செய்வதன் மூலமும்,

(ii) (இ) தேர்தலின் போது தவிர, வாக்குகள் சமமாக இருக்குமிடத்து தலைவருக்கு அறுதியிடும் வாக்கொன்று இருத்தல் வேண்டும். தேர்தலின் போது வாக்குகளின் எண்ணிக்கை சமமானவிடத்து சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

06.3 இதன்கண்ணுள்ள (ii) ஆம் உப பிரிவிற்கு பின்னர் மீண்டும் (ii) ஆக குறிப்பிடப்பட்டுள்ள உப பிரிவினை (iii) என இலக்கமிடுவதன் மூலமும்

07. கூட்டுறவுச் சங்க விதிகளின் 21 ஆம் பிரிவானது பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

07.1 இதன்கண்ணுள்ள (i)(அ) ஆம் உப பிரிவில் 21 என்னும் இலக்கத்தை நீக்கி அதற்குப் பதிலாக 18 என்னும் இலக்கத்தை பதிலீடு செய்வதன் மூலமும்,

07.2 இதன்கண்ணுள்ள (உ) ஆம் உப பிரிவை (உ)(i) ஆம் உப பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் (உ)(ii) என புதிய பிரிவொன்றை சேர்ப்பதன் மூலமும்,

(உ)(ii) சங்கமொன்றுக்கு அல்லது வேறு பதிவுசெய்யப்பட்ட சங்கமொன்றுக்கு அல்லது ஒழிப்போனுக்கு செலுத்தப்படவேண்டிய தொகையினை மூன்று மாதங்களுக்கு மேலாக செலுத்தத் தவறி, இந்த தொகையினை தீர்வு செய்து பன்னிரண்டு மாதங்கள் முடிவடையாத ஒருவர் அல்லது சங்கமொன்றுக்கு அல்லது வேறு பதிவுசெய்யப்பட்ட சங்கமொன்றுக்கு அல்லது ஒழிப்போனுக்கு செலுத்தப்படவேண்டிய வேறு ஏதேனும் தொகையினை மீள செலுத்துவதற்குத் தவறி, இந்த தொகையினை தீர்வு செய்து பன்னிரண்டு மாதங்கள் முடிவடையாத ஒருவர்.

07.3 (ஐ) மற்றும் (ஒ) என பின்வரும் புதிய உப பிரிவுகளை சேர்ப்பதன் மூலமும்,

(ஐ) சங்கத்தின் துணைவிதிக்கு அமைவாக செயற்குழுவில் அல்லது மாவட்ட செயற்குழுவில் அல்லது பிராந்திய செயற்குழுவில் உறுப்பினராக இருப்பதற்கு தகைமையற்ற ஒருவர்.

(ஒ) சங்கத்தின் பொதுச் சபையினால் செயற்பாடற்ற உறுப்பினர் ஒருவரென வெளிப்படுத்திய ஒருவர்.

07.4 இதன்கண்ணுள்ள (ii)(உ) ஆம் உப பிரிவிற்கு உடனடுத்து (எ) என பின்வரும் புதிய உப பிரிவொன்றை சேர்ப்பதன் மூலமும்,

(எ) சங்கமொன்றுக்கு அல்லது வேறு பதிவுசெய்யப்பட்ட சங்கமொன்றுக்கு அல்லது ஒழிப்போனுக்கு செலுத்தப்படவேண்டிய தொகையினை மூன்று மாதங்களுக்கு மேலாக செலுத்த தவறுதல் அல்லது சங்கமொன்றுக்கு அல்லது வேறு பதிவுசெய்யப்பட்ட சங்கமொன்றுக்கு அல்லது கலைத்து மூடுநருக்கு செலுத்தப்படவேண்டிய வேறு ஏதேனும் தொகையினை மீளச் செலுத்தத் தவறுதல்.

07.5 இதன்கண்ணுள்ள (iii) ஆம் உப பிரிவில் 21 என்னும் இலக்கத்தை நீக்கி அதற்குப் பதிலாக 18 என்னும் இலக்கத்தை பதிலீடு செய்வதன் மூலமும்,

07.6 இதன்கண்ணுள்ள (iv) ஆம் உப பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் புதிய உப பிரிவினை பதிலீடு செய்வதன் மூலமும்,

(iv) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் செயற்குழுவுக்கு அல்லது மாவட்ட செயற்குழுவுக்கு அல்லது பிராந்திய செயற்குழுவுக்கு தெரிவு செய்யப்பட்ட ஒருவர் அவ்வாறு தெரிவுசெய்யப்பட்டு 14 நாட்களுக்குள் தாம் அவ்வாறு தெரிவு செய்வதற்குத் தகைமையுடையவரென சங்கத்தின் துணைவிதிகளில் உள்ளவாறு சத்திய கடதாசி மூலம் வெளிப்படுத்துதல் வேண்டும்.

08. கூட்டுறவுச் சங்க விதிகளின் 43 ஆம் பிரிவை நீக்கி, அதற்கு பதிலாக பின்வரும் பிரிவினை பதிலீடு செய்வதன் மூலம் 43 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது.

43. (i) உணவு மற்றும் கூட்டுறவு பணிகள் தொடர்பிலான மாண்புமிகு அமைச்சரினால் கூட்டுறவுச் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (107 ஆம் அத்தியாயம்) 46 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 1950.03.24 ஆந் திகதியிடப்பட்டதும் 10086 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விதிகளின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுறவு நிதியமானது இந்த விதிகளின் 55 ஆம் விதியினால் மேற்படி விதிகள் நீக்கப்படுவதாயிருப்பினும், தொடர்ந்து நடைமுறையிலிருப்பதாக கருதப்பட்டு, அமைச்சரின் அத்தகைய ஏதேனும் பொது அல்லது விசேட பணிப்புரைகளுக்கு அமைவாக நிதியமானது குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(ii) இந்த நிதியக்குழுவின் கட்டமைப்பானது பின்வருமாறாகும்:-

(அ) வடமேல் மாகாண சபை கூட்டுறவு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் - நிதியக்குழுவின் தலைவராதல் வேண்டும் ;

(ஆ) வடமேல் மாகாண சபையின் பிரதி பிரதான செயலாளர் (நிதி முகாமைத்துவம்);

(இ) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், பதிவாளர் - நிதியக்குழுவின் செயலாளராதல் வேண்டும்;

(ஈ) வடமேல் மாகாண கிராமிய வங்கி சங்கத்தின் தலைவர்;

(உ) கூட்டுறவு மாவட்ட சபையொன்றின் தலைவரொருவர்:-

(iii) சகல உறுப்பினர்களினதும் பதவிக்காலம் இந்த உறுப்பினர்களின் உத்தியோகப்பூர்வ பதவிக்காலப்பகுதிக்கு மாத்திரம் வரையறுக்கப்படும்.

(iv) நிதியக்குழுவின் கூட்டமொன்றிற்கான கூட்டநடப்பெண் மூவராதல் வேண்டும்.

(v) இந்தக் குழுவுக்கு அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஊதியமொன்று செலுத்தப்படலாம்.

(vi) இந்த நிதியத்தின் நிதியானது பின்வரும் விடயங்கள் சார்பில் பயன்படுத்தலாம்:

(அ) கூட்டுறவு கல்வி, பயிற்சி, விரிவாக்கல் மற்றும் பிரசார வேலைகள் உட்பட கூட்டுறவு பயிற்சி நிலையங்களை தாபித்தலும் நடாத்திச் செல்தலும்.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைத்துவம் மற்றும் வினைத்திறன் மேம்பாடு.

(இ) கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி புரிதல்.

(ஈ) கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய திட்டத்திற்கு நிதி வசதிகளை செய்தல்.

(vii) பதிவுசெய்யப்பட்ட சங்கம் ஒவ்வொன்றும் அதன் வருடாந்த தேறிய இலாபத்திலிருந்து 10 சதவீதம் அல்லது 500/- ரூபா என்னும் இரண்டில் கூடிய தொகையை கூட்டுறவு நிதியத்திற்கு பங்களிப்பு தொகையாக வருடாந்தம் செலுத்துதல் வேண்டும்.

(viii) இந்த பங்களிப்பு தொகையானது கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டு கணக்காய்வு அறிக்கை சங்கத்திற்கு கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் செலுத்துதல் வேண்டும்.

(ix) ஆயினும் நிதியத்திற்கான பங்களிப்பு தொகையினை மூன்று மாத காலத்திற்குள் முழுமையாக செலுத்தி முடிக்கும் சங்கங்களுக்கு இவ்வாறு செலுத்திய தொகையிலிருந்து 25 சதவீதம் சங்கத்தின் உறுப்பினர் அபிவிருத்தி நிதியத்திற்கு மீண்டும் பெற்றுக் கொள்வதற்கான உரிமை சங்கத்திற்கு உள்ளது. இந்த உறுப்பினர் அபிவிருத்தி நிதியம் பயன்படுத்தும் விதமானது துணைவிதிகள் மற்றும் குழு கட்டளைகள் மூலம் அங்கீகரிப்பித்துக் கொண்டு பதிவாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்தல் வேண்டும்.

(x) கூட்டுறவு நிதியத்திற்கான பங்களிப்பு தொகையினை செலுத்துதலானது கணக்காய்வு அறிக்கை சங்கத்திற்கு கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதங்களை விஞ்சுமாயின் குறித்த ஆறு மாதம் விஞ்சப்பட்ட திகதியிலிருந்து மாதமொன்றிற்கு 1 சதவீதம் தண்டப்பணத்துடன் சேர்த்து சங்கத்தினால் இந்த தொகையானது செலுத்தப்படுதல் வேண்டும்.

(xi) கூட்டுறவு நிதியத்தின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் நடவடிக்கை முறைகளை தயாரித்து விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்தல் வேண்டும்.

(xii) நிதியத்தை நிருவகிக்கும் பொருட்டிலான செலவுகள் யாவும் கூட்டுறவு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(xiii) இந்த நிதியம் வருடாந்தம் கணக்காய்வாளர் அதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

09. கூட்டுறவுச் சங்க விதிகளின் 48 ஆம் பிரிவானது பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது.

09.1 இதன்கண்ணுள்ள (i) ஆம் உப பிரிவு (i)(அ) என மீண்டும் இலக்கமிடுவதன் மூலமும் இந்த உப பிரிவில் 5,000 ரூபா என்னும் இலக்கத்தை நீக்கி அதற்குப் பதிலாக 25,000 என்னும் இலக்கத்தை பதிலீடு செய்வதன் மூலமும்,

09.2 இதன்கண்ணுள்ள (i)(அ) ஆம் உப பிரிவை உடனடுத்து, (ஆ) மற்றும் (இ) என்னும் புதிய உப பிரிவுகளை சேர்ப்பதன் மூலமும்,

(ஆ) ஆயினும், சங்கமொன்றின் பொதுச் சபையின் அங்கீகாரம் மற்றும் ஒவ்வொரு சங்கத்தினதும் செயற்பாடு என்பவற்றை அடிப்படையாக கொண்டு சொத்துக்கள் எதனையும் கொள்வனவு செய்வதற்கு அந்தந்த சங்கங்களுக்கு வரையறுக்கப் படும் விதத்தில் ஐந்து இலட்சம் ரூபா (ரூபா 500,000) என்னும் உச்சத்திற்கு உட்பட்டு முன் அங்கீகாரத்தினை வழங்குவதற்கு பதிவாளருக்கு அதிகாரம் உள்ளது.

(இ) மேல் (i)(அ) ஆம் உப பிரிவுக்கு அமைவாக அந்தந்த சங்கங்களினால் முன் அங்கீகாரம் பெற்றுக் கொண்ட எல்லை அல்லது இவ்வாறு எல்லைகளை அங்கீகரிப்பித்துக் கொள்ளாத சங்கங்கள் இருபத்தையாயிரம் ரூபாவை (ரூபா 25,000) அல்லது அதனை விஞ்சும் எல்லா சந்தர்ப்பங்களிலும் பொதுச் சபையின் அங்கீகாரத்துடன் அசையா சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு பதிவாளரின் முன் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்தல் வேண்டும்.

09.3 48 (iii) என்னும் புதிய உப பிரிவொன்றை சேர்ப்பதன் மூலமும்,

48 (iii) மேல் (i) ஆம் (ii) ஆம் உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அசையும் அல்லது அசையா சொத்துக்களை கொள்வனவு செய்யும் போது பதிவாளரினால் வெளிப்படுத்தப்படும் கொள்வனவு நடவடிக்கை முறையினை பின்பற்றுதல் வேண்டும்.

10. கூட்டுறவுச் சங்க விதிகளின் 49 ஆம் பிரிவின் (xii) (அ) ஆம் உப பிரிவை நீக்கி, அதற்கு பதிலாக பின்வரும் பிரிவினை பதிலீடு செய்வதன் மூலம் 49 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது.

(xii) (அ) நடுத்தீர்ப்பாளர் ஒருவரின் அல்லது நடுத்தீர்ப்பாளர் குழுவின் தீர்ப்புக்கு எதிராக பதிவாளருக்கு செய்யப்படும் மேன்முறையீடு எதுவும் அதற்கான காரணங்கள் எழுத்து மூலம் தீர்ப்பு வழங்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செய்யப் படுதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு மேன்முறையீட்டு விண்ணப்பதுடனும் அத்தகைய விண்ணப்பம், அவர்களுக்கு மாறாக தீர்ப்பு வழங்கப்பெற்ற தரப்பாரால் அனுப்பப்பட்டதாயிருக்குமிடத்து, தீர்ப்பு தொகையில் ஐந்து சதவீதம் அல்லது ஐம்பதாயிரம் ரூபா (ரூபா 50,000) என்னும் இரண்டில் குறைந்த தொகையாக உள்ளதோ அத்தொகையையும் மேன்முறையீட்டு வைப்புப் பணமாக பதிவாளருக்கு அனுப்பப்படல் வேண்டும். ஏதேனும் பணம் சம்பந்தமாக கோரிக்கை செய்கின்ற தரப்பாரால் மேன்முறையீடு செய்யப்பட்டவிடத்து ஐந்து சதவீதம் அல்லது ஐம்பதாயிரம் ரூபா (ரூபா 50,000) என்னும் இரண்டில் குறைந்த தொகையாக உள்ளதோ அத்தொகை மேன்முறையீட்டு விண்ணப்பத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.